

All Rights Reserved.

பாண்டுரங்கன்

நடிகர்கள்

M. R. கிருஷ்ணமூர்த்தி	—	புண்லீகன்
வித்வான் *K. A.* ஸ்ரீனிவாசன்	—	குக்குடமுனி
காளி *N.* ரத்னம்	—	மாமா
T. N. வாசுதேவ பிள்ளை	—	பந்து
K. A. சங்கர ஐயர்	—	ஜன்னு
K. K. பெருமாள்	—	சுபேதார்
பிரபாத் வெங்கட்ராவ்	—	லக்ஷ்மண ராவ்
K. P. ராஜேந்திரன்	—	கட்டையன்
M. K. கோபாலன்	—	இந்திரன்
U. M. ஏழுமலை	—	சமையல்காரன்
N. ராமசாமி பிள்ளை	—	ஹனுமந்தன்

T. A. மதுரம்	—	ஜக்கா
P. S. சிவபாக்யம்	—	சாமளா
கோல்டன் கம்பெனி *P.* சாரதாம்பாள்	—	சத்தியவதி
M. S. சந்திராபாய்	—	இந்திராணி
M. S. சரோஜா	—	ரஸிகா
K. K. கிருஷ்ணவேணி	—	ரஞ்சிதம்
R. காந்தாமணி	—	சரசாங்கி
M. V. சுலோசனா	—	இடைச்சி

—(✷)—

Scenerio & Direction ... D. C. GUNE
Story & Dialogues ... T. K. SUNDARAM

Songs

PAPANASAM SIVAM & T. K. SUNDARAM

பாண்டுரங்கன்

கதைச் சுருக்கம்.

பாதாளத்தில் விருத்திரனென்னும் சூரன் இந்திரனைக் கொன்று இந்திரபதவியை அடையவேண்டி கொடுந்தவம் செய்கிறான். அவனது தபாக்கினியால் தேவேந்திரன் குழப்பமேலிட்டு தேவகுரு மூலமாக அதன் உண்மையை யுணர்ந்து விருத்திராசூரனைக் கொல்ல அவனது தபோவல்லமையால் இந்திரனைக் கல்லாகச் சபிக்கிறான். அக்கோர சம்பவத்தைக் கண்ணுற்ற இந்திராணி ஸ்ரீமந் நாராயணனைச் சிந்தித்து முறையிட பகவான் பிரசன்னமாகி புண்லீகனுக்குக் காக்ஷியளிக்கப் பூலோகத்திற்கு வருவோம். அதுசமயம் உன் பதியின் சாப விமோசனமாகுமென்று அனுக்கிரஹித்து மறைகிறார்.

பூலோகம்

உலோகதண்டமென்னும் சிற்றூரில் ஜன்னு, சத்தியவதி என்னும் உத்தம தம்பதிகள், புத்திரன் புண்லீகனுடன் வாழ்ந்து வருகின்றனர். புண்லீகன் மனைவி ஜக்கா தன் மாமி மாமனாரை கொஞ்சமும் லக்ஷியம் செய்வதில்லை. சதா அவர்களோடு சண்டையிடுவதுமல்லாது தன் புருஷனைத் தூண்டிவிட்டு அவர்களைக் கண்டிக்கச் செய்தும் வருவாள். புண்லீகனோ துஷ்டசாவகாசத்தால் கெட்டவனாகி மதுபானம் பிறர்தார இச்சை முதலிய பாதகங்களையே தனது சாதகமாகக் கொண்டவன். இவ்வாறிருக்க, தாசி சாமளை அவ்வூர் நாட்டாண்மை பந்துவை ஏமாற்றிவிட்டுப் புண்லீகனை நேசிக்கிறாள். அதை யுணர்ந்த பந்து புண்லீகனுக்கு விரோதியாகிறான். ஜக்காவின் கொடுமைகளைச் சகிக்காத ஜன்னுவும் சத்தியவதியும் தங்களைத் தனியாக வைத்து விடச்செய்யும்படிக் கேட்க, ஜக்கா அவர்களைக் கண்டவாறு ஏசி புண்லீகனிடம் தன்னை பற்பலவாறு நிந்தித்ததாகச் சொல்லி கோபமூட்ட, புண்லீகன் அவர்களை ஓர் அறைக்குள் போட்டு மூடி விடுகிறான்.

புண்லீகன் கோவிலில் ராதை யென்னும் ஓர் குடும்பப் பெண்ணை பலாத்காரம் செய்ய முயற்சித்துப் பயன் படாமையால் அன்றிரவு அவளை எப்படியும் தூக்கிக்கொண்டு போவதாய்ச் சபத

யிடுகிறான். இதைக் கேள்விப்பட்ட அவளது மாமனார் லக்ஷ்மண ராவ், நாட்டாண்மை பந்துவிடம் சொல்லி வேண்டிய ஆட்களை வைத்துப் புண்லீகனைப் பிடித்து ஹிம்சிக்கும் சமயம் தப்பி ஓடிய புண்லீகனது சிநேகிதர்களால் கேள்விப்பட்ட ஜன்னுவும் சத்திய வதியும் லக்ஷ்மண ராவ் மனையணுகிப் புண்லீகனை மீட்டுக் கொண்டு செல்கிறார்கள். புண்லீகன், தன் பெற்றோர்கள்தான் தனக்கு நேர்ந்த அவமானத்திற்குக் காரணஸ்தர்களென்று சந்தேகித்து ஜன்னுவையும் சத்தியவதியையும் வீட்டினின்றும் அடித்துத் துரத்தி விடுகிறான். அவர்கள் காசிக்குச் செல்கிறார்கள்.

புண்லீகன் சமையலுக்காக ஓர் சமையற்காரனைக் கூட்டிவர ஜக்கா சமையற்காரனை பார்த்து அருவருப்புக் கொண்டவளாய் புண்லீகனிடம் கோபித்துக்கொண்டு தன் தாய் மனைக்குப் பிரயாணப்படுகிறாள்.

தாசி சாமளா வீட்டு வேலைக்காரன் ரஞ்சித மென்னும் வேலைக் காரியைக் காதலிக்கிறான். அதைக்கண்ட மாமா அவனைக்கண்டிக்க அதன் காரணத்தால் பகைகொண்ட வேலைக்காரன் சாமளை யால் புண்லீகனுக்கு எழுதிக் கொடுத்தனுப்பிய காதற் கடித மொன்றை நாட்டாண்மை பந்துவிடம் கொடுத்து விடுகிறான்.

நாட்டாண்மை பந்து புண்லீகனைத் தொலைத்து விடத் தக்க ஆதாரம் கிடைத்து விட்டதென்று சந்தோஷித்து ஏற்கனவே தாசி சாமளையை வைத்துக்கொண்டிருக்கும் சுபேதாரிடம் அதைக் காண்பித்துப் பகை மூட்டச் செல்லுகிறான். வழியில் ஜக்கா மாட்டு வண்டியில் சென்று கொண்டிருப்பதைக் கண்ட பந்து, ஜக்காவி னிடம் அக்கடிதத்தைக் காட்ட ஜக்கா தன் புருஷன் மீது ஆத்திரம் கொண்டவளாய்த் தாய் மனைக்குச் செல்லாமல் திரும்பி விடுகிறாள்.

பந்து மென்மேலும் குதூகலித்தவனாய்ச் சென்று சுபே தாரைக் கண்டு அக்கடிதத்தைக் கொடுத்து அவனுக்குக் கோபக் கொதிப்புண்டாகும்படித் தூண்டுகிறான். சுபேதார் புண்லீகனை எப்படியும் கொன்று விடுவதாகத் தீர்மானித்துப் புறப்படுகிறான்.

புண்லீகன் தன் சமயற்காரன் மூலம் ரஸிகா என்னும் தாசி யைத் தன் மனைக்கு வரவழைத்து சல்லாபித்துக் கொண்டிருக்கும்

சமயம் தாசி சாமளை, தன் தாயார் சரசாங்கியோடு மாமாவைக் கூட்டிக் கொண்டு வந்து புண்லீகனிடம் ஹிதமாகப் பேசி வீட்டையும் எழுதி வாங்கிக் கொள்கிருள். அதே சமயத்தில் ஜக்கா வீட்டினுள்ளே பிரவேசித்து தாசி சாமளை முதலியோரை அடித்துத் துரத்துகிருள்.

புண்லீகனது விரோதி, பந்துவால் தூண்டப்பட்ட சுபேதார் வீட்டினுள்ளே கலவரச் சப்தம் கேட்டு, புண்லீகனைப் பிடிக்க உள்ளே நுழைய புண்லீகனும் ஜக்காவும் தப்பித்தோடி விடுகிருர்கள். சுபேதார் தாசி சாமளையையும் சரசாங்கியையும் ஊரை விட்டோட்டி விடுகிருன். மாமாவும் ஓடி விடுகிருன்.

பிழைப்புக்காகக் காசிக்குப் போகத் தீர்மானித்த புண்லீகன் வழி நடக்கமுடியாத ஜக்காவைத் தன் தோள்மேல் தூக்கிக்கொண்டு காட்டின் வழியே செல்லுகிருன். வழியில் பசி மயக்கத்தால் மூர்ச்சித்துக் கிடக்கும் ஜன்னுவையும், சத்தியவதியையும் பார்த்து விட்டு அவர்கள் கதறிக் கதறிக் கூவி அழைத்தும் திரும்பிப் பாராமல் சென்றுவிடுகிருன். சத்தியவதி மிகவும் துக்கித்தவளாய் பகவானைப் பிரார்த்திக்க, பகவான் ஓர் இடைப் பெண்ணுக வந்து அவர்கள் பசியாற்றிச்செல்கிருர்.

புண்லீகனும் ஜக்காவும் குக்குட முனிவரின் ஆசிரமம் அணுகி அவரால் உபசரிக்கப் பட்டு அன்றிரவு அவ்விடத்தில் தாமதிக்கிருர்கள். பற்பல சிந்தனைகளால் நித்திரையில்லாத புண்லீகன் கங்கை, யமுனை, சரஸ்வதி என்னும் தெய்வநதிப் பெண்களால் நிந்திக்கப் பட்டு தான் செய்த பாவங்களையுணர்ந்து குக்குட முனிவரின் உபதேசத்தால் தனது பெற்றோர்களைத் தேடிக் கண்டு அவர்களால் ஆசிர்வதிக்கப் பட்டு அவர்களுக்கு வேண்டிய வழி பாடுகளைச் செய்து முடிவில் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவின் தரிசனம் பெற்று தன் பெயரால் பண்டரிபுர மென்று விளங்க ஓர் நகரம் உண்டாக வரம் பெறுகிருன். அது சமயம் இந்திரனது சாபமும் விமோசனமும் ஆகின்றது. புண்லீகனது கோரிக்கைப்படியே பகவான் பண்டரி புரத்தில் பாண்டுரெங்கனுக விளங்குகிருர்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

பாண்டுரங்கன்

பாட்டுகள்.

1 அரம்பைப் பெண்கள்.

வானுலாவும் தேவ தேவா
வச்ரபாணி யான தீபா (வா)
தேன்மொழி இந்த்ராணியோடு
தினமும் மருவி வாழ்வு நீடு (வா)
பானுதயம் போல் பிரகாச
பஞ்ச தருவின் நிழலில் வாசா
கான ரம்ய கண்ய நேசா
காம தேனு க்ஷேம விலாச (வா)
சங்க நிதி பதுமநிதி
தங்கும் செல்வ மங்களவாரிதி (வா)

2 இந்திராணி

தேவரம்பையர் யாவரும் திகழ்
சீர்பொருந்திய வாழ்விதே—கன
சீர் பொருந்திய வாழ்விதே

தோழி

பூணும் இந்திர போகமே—இது
பூர்வ புண்யமு மாகுமே—இது
பூர்வ புண்யமு மாகுமே

தோழி

மேவிடும் பல தேவரும்பணி
வேதனும் புகழ் யோகமே

இந்திராணி

வேறிதற்கிணை ஏது சொல்லடி

தோழிகள்

இணையேது இணையேது
இணை ஏது

இந்திராணி

தேவ ரம்பையர் யாவரும் திகழ்
சீர்பொருந்திய வாழ்விதே

3 ஜன்ஹூவின் பஜனை

ராம ராம ராமா
ரவி குல சோமா
சாமளரூப தயாளகுணநிதே (ராம)
தசரத பாலா புஜ பல பீமா
பஜனை செய்தோமே பணிவுடன் யாமே
வேதங்கள் போற்றும் கோதண்டபாணி
நீதண்டிடாதருள் செய்குவாய் ஜெய ஜெய (ராம)

4 ஜக்கா

பொன்னான கையால் இப்
புஷ்பமதைச் சூட்டும்—பசும்—(பொன்)
நல்ல சன்மானம் தாரேன்—தயவுடன் பாராட்டும்
(பொன்)

புண்லீகன்

அன்னமே நானே
அகமகிழ்ந் தேனே
சன்மானம் தன்னை—எங்கே
தந்திடுவாய் முன்னே.

ஜக்கா

சன்மானம் முன்னே—தந்திடுவாரோ
சொன்னால் போறுதோ—என் சொல்லை நம்பிடரோ

புண்லீகன்

தேனென்குமுன்னே—தித்திக்குமோ சொல்
மானே நீ என்னை—ஏமாற்றுவதும் என்னே

ஜக்கா

என்னரும் நேமா—இன்புறும் க்ஷேமா—
அன்பான முத்தம்—என் ஆசையின் நிமித்தம்—
தந்தேன் (பொன்)

5 சாமளா

இவர் யாரடி சகியே
எதிரில் நிற்கும் (இவர்)
நவ நாகரீகத்தில் நாரியரை மயக்கும்
கவனம் என் மீதில் கொண்டு
காதல் கண்ணோட்டம் வைக்கும் (இவர்)
அடிக்கடி ஏதோ சொல்ல
ஆவலைப் பெருக்குறார்
ஆசை யெனும் கொடிய
அவஸ்தையில் இருக்கிறார்
இடுப்பிலிருக்கும் பையை
எடுக்கவும் விழிக்குறார்
எடுத்தாலும் இந்தா வென்று
கொடுக்கவும் ஒளிக்குறார் (இவர்)

6 புண்லீகன் விருத்தம்

மாதர் சிரோமணி மதன சிங்காரி மதி வதன
சீதள வசீகரி நீள் சேல் விழியாள் தனை நினைந்து
காதலு மிகு மென்னை வலையில் காதலித்து மகிழ் வுடனே
தூது விட்டாள் என் சொல்வேன் நான்செய்த
புண்ணியத்தை.

7 சாமளா

மார மனோகரனே—சுகு (மார)
நான் கோரிய நாயகனே—சுகுணனே
கோதையர் மோகனே
கோமள தேகனே (மார)

8 CA. 1261. ஜக்கா

நானே சர்வாதி காரி—(இங்கு) (என்)
நாதன் சுகத்தையே கோரி—வந்த (நானே)

நாதன் சுகத்தையே கோரி—எந்த
நாளும் ரமிக்கும்—வாழ்வு செழிக்கும்
சுகத்தைக் கோரிவந்த (நா)

புருஷனுறவதே கொண்டபினேபிற
போதமும் வேதமும் ஏனோ
பூமி மீதிலே யார் மெச்சவேணும்
புகல்வோர் நெஞ்சமும் நானும் (நானே)
மருமகளாக எந்தனை மதியா
மாமிக்கு வணங்கவும் தலைவிதியா
மஹா விரசமிது மிகமிக மீறுது
மனம் அறியாததும் ஏது (நானே)

9 புண்லீகன்

ஏனிந்தக் கோபம்—எதனாலே மனஸ்தாபம்
மேனி வெம்பி நீயே மிகவே நலிந்தாயே (ஏனிந்தக்)
மானினி நல்லாளே மதுரச் சொல்லாளே
கானமயிலே என்னிரு கண்மணியாளே (ஏனிந்தக்)

ஜக்கா

ஏதுக்கு வீணே எல்லாம் நான் தெரிவேனே
பாதகம் ஈதன்றோ பொய் பாஷைகள் நன்றோ
எல்லாம் நான் தெரிவேனே
வாதிக்குதென் நெஞ்சம் வாய்பேசிடாதீர்
போதித்தவர் யாரோ பொது மாதர்கள் நேசம்
கொள்ளப்போமோ பெருமோசம்

புண்லீகன்

வீணபவாதம் எண்ணவேண்டாம் விபரீதம்
வேணுமென்றே யாரோ வினையே விளைத்தாரோ
எண்ணவேண்டாம் விபரீதம்
நாணமேயில்லாத நங்கையரை நேரே
காணக்கண்கள் கூசும் எனில் காதலிப்பேனோ
கையாலும் தொடுவேனோ (ஏனிந்தக்)

10 குக்குட முனி

கலகஞ் செய்யும் வேல்கண் மங்கைப் பருவப் பெண்கள்
கலவிகைவல்யம் என் பார்—மூடர்
கலியின் ப்ரபாவமிதே
மலஞ்சோர நாறும் குடல் ஒன்பதுவாய்த் தேகம்
எலும்புக் கூடாகும் இதைக்—காணர்
இருகண் கபோதிகளாம்
மண்ணோடு மண்ணாய் பிடிசாம்பலா முடலைக்
கண்ணாட்டிதேனே என்பார்—அணைந்தே
கட்டிக் கரும்பே என்பார்
நீர்க்குமிழி இளமை நீர்மேல் எழுத்து வாழ்க்கை
பார்த்துண்மை யுணராரோ—மனிதர்
பரமன் தாள் பணியாரோ

11 குக்குட முனி

துள்ளி விளையாடி மெல்லமடிமீது
சொல்லமுதம் ஈகும் சிறுபாலர்
இல்லையென வாடி நல்ல வரம்தேடி
இல்லறமே கோடி புரிவார்கள்
அல்லும் பகலாக பிள்ளைகளினாலே
அல்லற்படுவார்கள் பலகோடி
தொல்லை யிது ஞான எல்லையுடையோனே
சொல்ல எளிதாமோ—புவிமாயை

CA. 1253 M. R. கிருஷ்ணமூர்த்தி & P. S. சிவபாக்கியம்.

12 சாமா

மோகன ரூப மனோகர சீலன்
முகங்காண வென் அகங்குழையுமே
முன்னே வருவாரோ (மோ)

பேரானந்தமாகப் பேசி எனையே
போவருவேனெனப் பொய் புகன்றாரோ
பேதைமனங் கவர்ந்தாரே அன்பரும்
வந்தெனக் காணுதல் வார்த்தை சொல்லுவாரோ (மோ)

புண்லீகன்

மான்விழியே உனைக் காணவந்தேனே
மனம் உன்தனை மறந்திடாது மதுரித செந்தேனே
மனோரம்யமாக மஹா மோக
வாரிதியாழ்ந்தேன்—வார்குழலாளே
மாமலர் வாசமும்—போல நாமுமே
மன்மத நாரியே மகிழ்வோம் நாமே (மான்)

13 ரஞ்சிதம்

பட்டம் பகலிலே பக்கமிருந்து பேசாதே
இது தீதே—உதவாதே—உன்
இஷ்டமிருந்தால் இருக்கட்டும் நீ மறவாதே பதறாதே.

கட்டையன்

எத்தனை நாள் தான் பொறுத்திருப்பேன்
அடி கண்ணே—இளம் பெண்ணே—இதை எண்ணே
அடி அத்தனை பாவம் உனக்குப்பிடித்திடும்
சொன்னேன்—பசும் பொன்னே—அடி மின்னே

ரஞ்சிதம்

ஆத்திரக்காரர்க்குப் புத்தி மட்டமென்ற
பேச்சு சரியாச்சு பயம் போச்சு
யாரும் பார்த்துவிட்டால் மானம் காத்திருப்பதெல்லாம்
போச்சு பெரும் பேச்சு வேண்டாம் மூச்சு

கட்டையன்

சக்கரைக்கட்டியே தக்கசமயமேவாடி
உறவாடி—முத்தந்தாடி—உன்
வக்கணைப் பேச்சிலே சொக்கிவிழுந்து
தள்ளாடி மனம்வாடி நொந்தேனேடி

14 ரஸிகா

மாமோகம் கொண்டேன் மாமோகம் என்றும்
மாறிடாத நல்ல ஸ்நேகம்—இன்ப
மான மார வைபோகம்
மாசிலாதமா மலரணை வாரும்
மாதென தாவலைத்தீரும்—அபி
மான வாழ்வதே கோரும்
மாமதி தீயாய்க் காய்வதினாலே

மன[illegible] மெழுகென மென்மேலே
சாமியே இனி தாமதம் ஏனோ
தாளேனே இனி தாளேனே இனி
தான போக சுகிர்தா (மாமோ)

15 C.A. 1254 மாமா

பாவி கையில் பாதி குடுமி பறிகொடுத்தேனே
பறிகொடுத்தேனே—உடல் துடிதுடித்தேனே
தேவடியாள் பணம் பறிக்க—ஜன்னுமகன் தினம் சுகிக்க
ஏவல் செய்து திரிந்த தல்லால்—எனக்கென்ன லாபம்
எனக்கென்ன லாபம் இது எவரிட்டசாபம் (பாவி)
செம்பட்டையானாலும் என் குடுமிபோலிந்த
ஜெகத்தினிலில்லை இல்லை
அம்பட்ட முனுசாமி அல்லாமல் என்குடுமி
யாருமே தொட்டதில்லை
அரைக்கீரைத் தைலமிட்டு அருமையாய் நான் வளர்த்தேன்
முளைக்கீரை பிடுங்கினாப்போல் மொட்டை செய்தானே
மொட்டை செய்தானே—கண்டமட்டும் வைதானே (பாவி)

16 இடைச்சி

நந்தகோபால வம்சமய்யா
கேளும் நாங்களெல்லாம் தேவர்களின் அம்சமய்யா
காணுவீர் யாதவர் நாங்களே—மாடு
கண்ணுகளைக் காத்திடுவோம்—பாருங்களே
பட்டணங்கடந்து—இந்தப் பாதையில் தொடர்ந்து
கட்டிதயிர் பாலுங்கொண்டு—விக்கப் போவதுண்டு
கடவுள் பொருத்தாலுமே—ஒருவர்
கண் கலங்கப் பொறுக்கோம் (நந்த)

17 கங்கை

பரிதிவானவன் முன்னம் பனி போல் நமது பாவ
பயமற முனியருள் பாலித்ததே

யமுனை

அறியாயோ பெரியோரை அணுகுவோர் சிறுமைகள்
அடையார்கள் எனவேதம் அறிவித்ததே

சரஸ்வதி

அரனாரும் திருமாலும் பிரமாதி முனிவோரும்
அருள் கூறும் முனிநாதன் அடிகளைத் தொழுவோம்

18 CA. 1261 குக்குடமுனி

மனங்கலங்காதே
மைந்தனே இப்போதே (மனங)
கனிந்த தென் நெஞ்சம்
கருணையினுலே
நினைந்தனே நீயே
நலம் பெறுவாயே (மனங்)
தந்தை தாய் எனும் தெய்வ தியானம்
தவறிடாது நீ செய்வது ஞானம்
அந்தரர்க்கு மிதுவாம் அபிமானம்
அறிவாய் மொழிவேன் — அடைவாய் சமாதானம் (மனங்)

19 CA. 1253 புண்லீகன்

நாயிலும் நான் கடையேன் என் அய்யனே
நலமே அறியேன் நானில மீது
பேயிலும் தான் கொடியேன் (நாயி)
தாயைத் தந்தையைச் சதி செய்தேனே
தவறே — தவறே — ஹா — ஹா ஹா ஹா
தீயவன் நானெங்கு தேடியே செல்லுவேன்
தெரியேன் அந்தோ பாவம் அய்யனே (நாயி)

20 புண்லீகன்

மஹாப் புனிதனுனேன் புவி மீது
மஹிமை யுணரப் பவம் மாய்ந்ததிப்போதே
சகாயமல்லவோ என் சற்குரு வாக்கியம்
சகல தவ பலமும் சார்ந்த சௌபாக்கியம் (மஹாப்)

21 CA. 1254 மாமா

பட்டாபி ராமா என்னே விட்டு விடாதே சொன்னேன்
(பட்டா)

ஸ்ரீமங்கள கல்யாண குண
சீதாபதி ஜெய ஜெய ராம் — என்
சித்த ரஞ்சன ராம் — நல்ல
உத்தம சற்குண ராம் — தசரத
சத்திய புத்திர ராம் ராம் ராம் ராம் (பட்டா)
காமக் குரோத லோப மோகமெனும்
கட்டை யறுத்திடு ராம் — யோக
நிட்டை கொடுத்திடு ராம் — ஞான
சிட்ட ரக்ஷகராம் — பொல்லா
துஷ்டரஞ்சிடும் ராம் ராம் ராம் ராம் (பட்டா)

22 புண்லீகன்

ஆனந்த மிவ்வேழை யடைந்தேன்
ஆண்டவனருளாலே
அன்னை தந்தை போல் கண் கண்டே
அறியும் தெய்வமுண்டோ
பின் புத்தியினுலே முன்பு பேய் மதி கொண்டேன் (ஆன)

23 புண்லீகன்

ருக்மிணி ரமணு யது திலகா
கமலவதன உனைக் கண்டேன் அனகா
பனகா சயனனே பவ பய மொழிந்தேன
ஜனனமும் புனிதம் அடைந்தேன் வரதா

24 பஜனை

ஜெகதபி ராம சுபாவன நாம
ஜெய ஜெய ஸ்ரீமது ரங்கா—ஹே
தேவ தேவ பிருந்தாவன கோகுல
சேகா ஞான சுரங்கா—ஒரு
தீதிலாது ப்ரகலாதனை யாண்டருள்
தீர வீர நாசிங்கா
திருவடி தந்தருள் நீதா
தீன தயாள சுபோதா
திகழும்ருக்மணி தேவி சமேதா
திவ்ய மங்கள விநோதா
ஜெயஹே—ஜெயஹே—ஜெயஹே
ஜெய பாண்டுரங்க ஜெயஹே.

ஜே ஜே விட்டல்.

பாண்டுரங்கன் பாடல்களை ஓடியோன்
ரிகார்டுகளில் கேட்டானந்தியுங்கள்.

The Screen Press, G.T., Madras.

கைவசம் இருக்கும் ப

தமிழ்

மார்க்கண்டேயர்

பட்டினத்தார்

கவிரத்ன காளிதாஸ்

வல்லாள மகாராஜன்

கம்பர்

ஜோதி அருணகிரிநாதர்

மதுரை வீரன் — உரிமை :
(சென்னை, செங்கல்பட்டு, வட ஆற்காடு,
தென் ஆற்காடு ஜில்லாக்கள் மாத்திரம்)

தெலுங்கு

சீதா கல்யாணம்

கிருஷ்ண லீலா

மாயா பஜார்

கிருஹலக்ஷ்மி — உரிமை :
(தென் இந்தியா, பர்மா மாத்திரம்)

மால பில்லா — உரிமை :
(பர்மா மாத்திரம்)

வர விக்ரயம் — உரிமை :
(பர்மா மாத்திரம்)

வந்தே மாதரம் — உரிமை :
(பர்மா மாத்திரம்)

For Bookings Apply to :—

VEL MURUGAN FILM SERVICE.

POST BOX No. 231.

128, Govindappa Naicken Street, G.T., MADRAS.

Telegram **"Velfilms"** *Telephone* **3664.**